# DEPOSITION OF WITNESS

## In the Court of the District Munsif cum Judicial Magistrate No.I, Usilampatti.

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC . 11/2019.** | | |
| **PW/DW/CW** | : | **PW8** | | |
| **Name** | : அறிவழகன் | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

( Accused present)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 09.08.2023

---

**முதல் விசாரணை:**

1. நான் குளத்துப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். சாட்சி முத்துப்பாண்டியை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். சுமார் 4, 5 வருடங்களுக்கு முன்பு பூச்சிப்பட்டியில் நடந்த விபத்து சம்பந்தமாக போலீசார் சம்பவயிடத்தில் பார்வையிட்டு படம் வரைந்து அவர்கள் விசாரணை செய்ததற்கு சாட்சியாக நானும் சாட்சி முத்துப்பாண்டியும் சாட்சி கையொப்பம் செய்தோம். நானும் சாட்சி முத்துப்பாண்டியும் பேசிக்கொண்டிருந்த போது எங்கள் முன்னிலையில் போலீசார் படம் வரைந்து விசாரித்தார்கள். (**அந்த பார்வை மகசர் அசா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி ் தரப்பு குறுக்கு விசாரணை:**

**2.** பூச்சிப்பட்டியில் இருந்து குளத்துப்பட்டி சுமார் 500 மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். நான் படம் வரைந்த பேப்பரில் கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல, எழுதப்பட்ட பேப்பரில் கையொப்பம் செய்தேன். சம்பவம் நடந்த இடம் குளத்துப்பட்டி அந்த பஸ்ஸ்டாப் பூச்சிப்பட்டி பஸ் ஸ்டாப் ஆகும். நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் போலீசாரிடம் கையொப்பம் செய்யவில்லை என்றும் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றும் சொன்னால் சரியல்ல.

S.d./ Arivalagan

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.